BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

**ப்ராம்ப்ட்டன் நகரின் இரண்டாவது கொல்லைப்புற தோட்டம் வளர்ப்புத் திட்டம் ஏறத்தாழ 7,000 பவுண்டுகள் விளைபொருள்உற்பத்தியைக் கொடுத்து குடியிருப்புவாசிகளின் உணவுப் பாதுகாப்புக்கு துணை நின்றுள்ளது**




ப்ராம்ப்ட்டன், ON (அக்டோபர் 28, 2021) – ப்ராம்ப்ட்டன் நகரின் இரண்டாவது கொல்லைப்புற தோட்டம் வளர்ப்பு திட்டம் பூர்த்தியடைந்து 2021 ஏப்ரல் மாதம் முதல் அக்டோபர் வரையிலான குடியிருப்பு வாசிகளின் தேவைக்காக 6,946 பவுண்டுகள் விளைபொருட்களை நன்கொடையாக வழங்கியுள்ளது..

நகர கவுன்சிலர் டக் வில்லான்ஸ் அவர்களால் தலைமை தாங்கப்பட்டு, நகரின் பூங்காக்கள் பராமரிப்பு மற்றும் வனம் அமைப்பு பிரிவினால் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட கொல்லைப்புறத் தோட்டம் வளர்ப்புத் திட்டமானது, ஏப்ரல் 2020 இல் துவக்கப்பட்டது; இதுவே கோவிட்-19 க்கு செவி சாய்க்குமுகமாக, இதன் வகையில் கனடாவில் துவக்கப்பட்ட முதல் திட்டமாகும். இது நகரில் ஏற்கெனவே இருந்து வரும் சமுதாய தோட்டம் அமைக்கும் திட்டத்தின் விரிவாக்கமாகும்.

இந்த திட்டம் மேயரின் கோவிட்-19 சமூக ஆதரவுக்கான பணிப்படைக்கு, உணவு ஆதாரவளங்களை வழங்கியது; இதன் மூலமாக பெருந்தொற்றினால் பல தரப்பிலும் தாக்கமடைந்த சமூகங்களுக்கு அவசியமான ஆதாரவளிக்க இயன்றது.

ப்ராம்ப்ட்டன் நகரவாசிகள் அனைவருக்குமான இந்த திட்டம், குடியிருப்புவாசிகளுக்கு தங்கள் தோட்டம் அமைக்கத் தேவையான மண், விதைப் பொட்டலங்கள் மற்றும் புதிதாக அமைக்கவிருக்கும் தோட்டங்களில் தாவாங்கள் வளர்ப்பதற்கான ஆலோசனை ஆகியவற்றை வழங்கியது. ஏப்ரல் தொடங்கி அக்டோபர் வரையிலான காலத்தில் குடியிருப்புவாசிகள் தங்கள் கொல்லைப்புறத் தோட்டங்களை வளர்த்து, அதன் மகசூலை சிலர் தங்களுக்காகவும் மற்றும் பிறர் உள்ளூர் உணவு வங்கிகளுக்கும் சமுதாய அமைப்புக்களுக்கும் வழங்கினர்; இப்படியாக பெற்றுக்கொண்ட சமுதாய அமைப்புக்களில் நைட்ஸ் டேபிள் (Knights Table), ரீஜெனெரேஷன் (Regeneration), லிஃப்ட்டிங் தெ ஃபால்லென் பெண்ட்டெகோஸ்ட்டல் சர்ச்/இக்லேசியா பெண்ட்டெகோஸ்ட்டல் லெனாண்ட்டாண்டோ அல் கைடோ (Lifting the Fallen Pentecostal Church/Iglesia Pentecostal Levantando Al Caido) மற்றும் ஹார்ட் லெக் யுனைட்டட் சர்ச்'ஸ் கம்யூனிட்டி கப்-போர்ட் (Heart Lake United Church's Community Cupboard) ஆகியவை அடங்கும்.

புத்தம்புதிய உற்பத்திப் பொருளை நன்கொடையாக வழங்குவதுடன் கூடுதலாக இந்தச் சுற்றுச்சூழல் பேணும் முனைப்பானது, கோவிட்-19 பெருந்தொற்றுக் காலத்தில் தங்களைச் சுறுசுறுப்புடன் வைத்துகொள்ளவும் உதவியது; மற்றும் வீட்டில் இருந்தபடியே செய்யும் செயல்களினால் தங்கள் மனநலனையும் நன்றாக வைத்துக்கொள்ள ப்ராம்ப்ட்டன்வாசிகளுக்கு துணை நின்றது.முதல் முறையாக தோட்டம் அமைப்பவர்கள் தோட்டம் அமைப்பது பற்றி கற்றுக்கொள்ளவும் பொழுது போக்குவதற்கான புதிய ஒரு செயலை முயற்சித்துப் பார்க்கவும் ஒரு சந்தர்ப்பமாக அமைந்தது.

இந்த் திட்டத்தை சாத்தியமாக்க உதவிய ஸ்காட்ஸ் கனடா லிமிட்டட் (Scotts Canada Limited), மட்டாமி ஹோம்ஸ் (Mattamy Homes), க்ரேட் கல்ஃப் (Great Gulf), பாரடைஸ் டிவலப்மெண்ட்ஸ் (Paradise Developments), ட்டி ஏ சி சி ஹோல்பொர்ன் கார்ப்பொரேஷன் ( TACC Holborn Corporation), மற்றும் ஃபீல்ட்கேட் டிவலப்மெண்ட்ஸ் (Fieldgate Developments) ஆகிய அமைப்புக்களுக்கு ப்ராம்ப்ட்டன் நகரம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

ப்ராம்ப்ட்டன் தோட்டக்கலைச் சங்கம் மற்றும் சிங்க்வாகவ்ஸி கார்டன் கிளப் ஆகிய நிறுவன அமைப்புக்கள், தோட்டம் அமைப்பதற்கான குறிப்புக்களை சமூக கொல்லைப்புறத் தோட்டம் அமைப்போருக்கான இ- செய்திக்கடிதம் மூலமாக வழங்கியமைக்காக நகர நிர்வாகம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

**2021 திட்டத்தில் என்னென்ன, எவ்வளவு  வழங்கப்பட்டன**

- 2,793 பங்கேற்பாளர்கள் ஒவ்வொருவரும் ஐந்து பைகள் நிறைத்த மண் மற்றும் மூன்று விதைப் பொட்டலங்களைப் பெற்றுக்கொண்டனர்.
- மொத்தமாக 13,980 பைகள் நிறைத்த மண் மற்றும் 8,379 விதைப் பொட்டலங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டன.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டனின் இரண்டாம் ஆண்டு கொல்லைப்புறத் தோட்டம் அமைக்கும் திட்டம் கிட்டத்தட்ட *7,000* பவுண்டுகள் விளைபொருட்களை, தேவைப்படும் குடியிருப்பாளர்களுக்கு வழங்கியது என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த திட்டம் கடந்த ஆண்டு தொற்றுநோய்களின் போது தொடங்கப்பட்டபோது, இதுவே இதன் வகையில் கனடாவில் முதன்முதலான திட்டமாகும், மேலும் ப்ராம்ப்ட்டன் அருகிலுள்ள மற்றும் தொலைதூர நகரங்களையும் தூண்டிவிட்டுள்ளது. கவுன்சிலர் வில்லான்ஸின் சிறந்த தலைமைத்துவத்திற்காகவும், எங்கள் ஆதரவாளர்களுக்காகவும், குறிப்பாக இந்த நேரத்தில் எங்கள் சமூக உணவு வங்கிகள் மீதான அழுத்தத்தைக் குறைக்க உதவுவதற்காக விளைபொருட்களை வளர்த்து, நன்கொடையாக வழங்கிய அனைவருக்கும் நன்றி."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டனின் இரண்டாவது வருடாந்திர கொல்லைப்புறத் தோட்டத் திட்டம் பெரும் வெற்றி பெற்றது! ஆயிரக்கணக்கான குடியிருப்பாளர்கள் தங்கள் சொந்த விளைபொருட்களை வளர்ப்பதற்காக விதைகள் மற்றும் மண் ஆகியவற்றைப் பெற்றனர், மேலும் எங்கள் சமூகத்திற்கு ஆதரவளிக்கும் விதமாக நன்கொடை அளித்தனர். இந்தத் திட்டம் குடியிருப்பாளர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மற்றும் நகரத்தின் பசுமை முயற்சிகளுக்கு ஆதரவளிக்கிறது. திட்டத்தின் இந்த வருட நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி."

- *டக் வில்லன்ஸ், தலைவர், கொல்லைப்புற தோட்டம் அமைக்கும் திட்டம்; மற்றும், நகர கவுன்சிலர் வார்டுகள் 2 & 6; மற்றும், உறுப்பினர், சுற்றுச்சூழல் ஆலோசனைக் குழு; மற்றும்,உறுப்பினர், CEERP சமூக பணிக்குழு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டனின் கொல்லைப்புறத் தோட்டத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் நமது சமூகத்தினருக்கான உணவுப் பாதுகாப்பினை நிவர்த்தி செய்வதற்கும் நகர ஊழியர்கள் அர்ப்பணிப்பு கொண்டுள்ளனர். ப்ராம்ப்ட்டன் ஒரு பசுமை நகரம், மேலும் குடியிருப்பாளர்களுக்கு ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கவும், நிலைத்து நிற்கும் தன்மை வழங்குவதற்கான வாய்ப்புகளை வழங்கவும் நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

"ரீஜெனரேஷன்'ஸ் மார்க்கெட்பிளேஸ் (எனும் உணவு வங்கி) எங்கள் சமூகத்தில் தேவைப்படுபவர்களுக்கு புதிய தயாரிப்புகளை மீண்டும் வழங்க ஏதுவாக்க்கிய, ப்ராம்ப்ட்டன் நகரின் கொல்லைப்புற தோட்டத் திட்டத்திற்கு மிகவும் நன்றி கூறுகிறது."

-

- *ட்டெட் பிரவுன்*, CEO, *ரீஜெனரேஷன் அவுட்ரீச் கம்யூனிட்டி*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca *இல்* இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ப்ரப்ஜோத் கைந்த்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca